

We Shine Academy™

guiding you to get through

# நடப்பு நிகழ்வுகள்
# (CURRENT AFFAIRS)
## ஏப்ரல் - 2020

We Are Here..!! To Guide You..!!



# WeShine Study Circle

# TNPSC

## நடப்பு நிகழ்வுகள்

## (Current Affairs)

## ஏப்ரல் - 04.04.2020

We Shine Academy™

guiding you to get through


Main Office @

**WeShine Study Circle**

Chrompet, Chennai

Phone: 8939144344, 8939244344

Branch Office @

**WeShine Study Circle**

Plot No: 47/60, "AK" Block,
7th Main Road, Anna Nagar
Chennai, Tamil Nadu – 600 040.

3rd Floor, West Wing, GokulArcarde,
No.2, Sardar Patel Road, Adyar
Chennai, Tamil Nadu– 600020.

https://weshineacademy.com

# பொருளடக்கம்


- தமிழக நிகழ்வுகள்
- இந்திய நிகழ்வுகள்
- உலக நிகழ்வுகள்
- விளையாட்டு நிகழ்வுகள்








## தமிழக நிகழ்வுகள்

- கொரோனா வைரஸ் சிறப்பு வார்டுகளில் உதவிடும் மூன்று தானியங்கி ரோபோக்கள் சென்னை அரசு ஸ்டான்லி மருத்துவமையில் வெள்ளிக்கிழமை (03.04.2020) அறிமுகம் செய்யப்பட்டது
    - **சென்னை அரசு ஸ்டான்லி மருத்துவமனையில் சுமார் 200 படுக்கைகள் வசதியுடன் கரோனா சிறப்பு வார்டுகள் அமைக்கப்பட்டுள்ளன.** இங்கு தற்போது கொரோனா வைரஸ் தொற்றால் பாதிக்கப்பட்ட ஐம்பதுக்கும் மேற்பட்ட நோயாளிகள் சிகிச்சை பெற்று வருகின்றனர்.
    - **செய்தி துளிகள்**
        - ஸ்டான்லி மருத்துவமனை தமிழ்நாட்டின் முதன்மை மருத்துவக் கல்லூரிகளில் ஒன்று.
        - 200 ஆண்டுகளுக்கு முன்பே (1740 ல்) இவ்வமைப்பு உருவாக்கப்பட்டாலும் கல்லூரியாக உருவாக்கப்பட்டது 1938 ல் தான். என்.டி.டி.வி செய்தி நிறுவனத்தின் இந்தியாவின் சிறந்த மருத்துவக் கல்லூரிகள் பட்டியலில் ஒன்பாதாவது இடம் பெற்றுள்ளது.

We Shine Academy ™

## இந்திய நிகழ்வுகள்

- பிரதமர் நிதிக்கு பொதுத் துறை மின் நிறுவனங்கள் சார்பில் ரூ.925கோடி வழங்கப்படும் என வெள்ளிக்கிழமை (03.04.2020) வெளியிடப்பட்ட அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.
    - **மின்துறை அமைச்சகம் மற்றும் புதிய & புதுப்பிக்கதக்க எரிசக்தி துறை அமைச்சக கட்டுப்பாட்டின் கீழ் செயல்பட்டு வரும் மத்திய பொதுத் துறை நிறுவனங்கள் சார்பில் பிரதமர் நிதிக்கு ரூ.925 கோடி நன்கொடை வழங்க முடிவு** செய்யப்பட்டுள்ளது என மின்துறை அமைச்சகம்

அறிக்கையில் தெரிவித்துள்ளது.

- **செய்தி துளிகள்:**
  - இந்திய அரசின் கட்டுப்பாட்டில் ஏறத்தாழ 300 பொதுத்துறை நிறுவனங்கள் உள்ளது. அவற்றுள் 181 பொதுத்துறை நிறுவனங்களின் பங்குகள் இந்தியப் பங்குச் சந்தையில் பட்டியலிடப்பட்டுள்ளது

## உலக நிகழ்வுகள்

- கூகுள் மற்றும் ஆல்பபெட் நிறுவனங்கள் சி.இ.ஓ சுந்தர் பிச்சை தங்களது நிறுவனத்தின் **மூலம் 800 மில்லியன் அமெரிக்க டாலர் மதிப்புள்ள (இந்திய மதிப்பில் 6085 கோடி) கொரோனா நிவாரண உதவியாக செய்ய உள்ளனராம்**
  - சிறு மற்றும் நடுத்தர வணிக நிறுவனங்கள், உலக சுகாதார அமைப்பான WHO, பிற சுகாதார நிறுவனங்கள், தன்னார்வ தொண்டு அமைப்புகள் மற்றும் சுகாதார ஊழியர்களுக்கும் உதவ உள்ளதாக தெரிவித்துள்ளர்.
  - **செய்திதுளிகள்:**
    - கூகுள் **1998 இல் லாரி பேஜ், சேர்ஜி பிரின் ஆகியோரால் துவங்கப்பட்டது**.
    - **தலைமையகம்** - மவுண்டன் வியூ, கலிபோர்னியா, ஐக்கிய அமெரிக்கா
    - **தொழில்துறை** - இணையம், மென்பொருள்.

- கொரோனா தொற்றால் உயிரிழந்தவர்களுக்காக தேசிய அளவில் துக்க தினத்தை இன்று (04.04.2020) அனுசரிக்கிறது சீனா.
  - **உலக வல்லரசு அமெரிக்கா முதல் இத்தாலி, சீனா, பிரான்ஸ், இங்கிலாந்து, வளைகுடா நாடுகள் வரை வளர்ந்த நாடுகளாலும் கட்டுப்படுத்த முடியாத ஒரு இக்கட்டான சூழலுக்கு ஆளாகியுள்ளது.** இந்நிலையில் இந்த வைரஸ் தாக்குதலால் உயிரிழந்தவர்களுக்கு அஞ்சலி செலுத்து

வகையில் இன்று தேசிய துக்க தினம் அனுசரிக்கப்படும் என சீன அரசு தெரிவித்துள்ளது.

- **செய்தி துளிகள்:**
  - சீனா தலைநகரம் - பெய்ஜிங்
  - சீனாவில் வூகான் நகரில் உருவானது கொரோனா வைரஸ் தொற்று.

## விளையாட்டு நிகழ்வுகள்

- கொரோனா அச்சுறுத்தல் காரணமாக நவம்பர் மாதம் இந்தியாவில் நடைபெறுவதாக இருந்த மகளிர் - யு-17 கால்பந்து உலகக் கோப்பைப் போட்டி ஒத்திவைக்கப்பட்டுள்ளது. **கொரோனா அச்சுறுத்தல் காரணமாக நவம்பர் மாதம் இந்தியாவில் நடைபெறுவதாக இருந்த மகளிர் யு-17 கால்பந்து உலகக் கோப்பைப் போட்டி ஒத்திவைக்கப்பட்டுள்ளது.** இந்த அறிவிப்பை ஃபிஃபா அமைப்பு வெளியிட்டுள்ளது.
  - **செய்தி துளிகள்:**
    - உலகக்கோப்பை கால்பந்து தோற்றம் : 1930
    - மண்டலம் : உலகளாவியது (ஃபீஃபா)

## திருக்குறள்

**குறள்:** 158

**குறள் பால்:** அறத்துப்பால்

**குறள் இயல்:** இல்லறவியல்

**குறள் அதிகாரம்:** பொறையுடைமை

**குறள்:**

**மிகுதியான் மிக்கவை செய்தாரைத் தாந்தந்**
**தகுதியான் வென்று விடல்**

**விளக்கம்:**

மனச் செருக்கினாலே தீமை செய்தவரை தாம் தம்முடைய பொறுமையினாலே வென்று விடுதல் வேண்டும்

We Shine Academy™